Registered as a Newspaper

Ceygma Pumps
மண்ணெண்ணெயில் இயங்கும் இங்கிலிஷ் வில்லியர்ஸ் என்ஜின் பொருத்திய பம்புகளுக்கு
யுனைற்றெட் அக்ரோ என்ஜினியரிங்
ஸ்ரான்லி வீதி, இராசாவின் தோட்டம் சந்தி, யாழ்ப்பாணம்.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை: ரூ. 1-25

'சிக்மா பம்ஸ்'
மின்சாரத்தில் இயங்கும் மோட்டர்கள் எம்மிடம் கையிருப்பில் உண்டு.
யுனைற்றெட் அக்ரோ என்ஜினியரிங்
533, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆடி மீ 13 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 2 (29 — 07 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 209

இந்திய நிர்ப்பந்தத்தை ஆட்சேபித்து

# குடாநாட்டில் இன்று ஹர்த்தால், பேரணி

## பொதுநல இயக்கங்கள் பலவும் சேர்ந்து ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 29

இனப்பிரச்சினைக்கான உத்தேச ஒப்பந்தத்தை ஏற்குமாறு, தமிழ்ப் போராளிகளை இந்தியா நிர்ப்பந்தித்து வருவதை ஆட்சேபித்து, இன்று குடா நாடு முழுவதிலும் ஹர்த்தாலும், ஆர்ப்பாட்டப் பேரணிகளும் நடைபெற உள்ளன.

குடா நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள பொதுநல இயக்கங்கள் இவற்றை ஏற்பாடு செய்துள்ளன.

திட்டவட்டமற்ற-தமிழர்களுக்கு பூரண உரிமைகளை வழங்காத—அரை வேக்காட்டுச் சரத்துகளையும், தமிழ்ப் போராளிகளைப் பலவீனப்படுத்த வகைசெய்யும் அம்சங்கள், நிபந்தனைகளை உள்ளடக்கியதுமான உத்தேச ஒப்பந்தத்தை ஏற்குமாறு இந்தியத் தரப்பில் போராளிகள் வற்புறுத்தப்பட்டு வருவதை ஆட்சேபித்தே இந்த ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் நடத்தப்படுவதாக பொதுநல இயக்கங்களின் பிரதிநிதிகள் உதயனுக்குத் தெரிவித்தனர்.

தமிழர்களுக்கு நன்மை செய்யாத ஒப்பந்தத்துக்கு உடன்படுமாறு நிர்ப்பந்திப்பது நியாயமற்றது. அதனை ஆட்சேபித்து எமது எதிர்ப் (4 ஆம் பக்கம் பார்க்க)

பிந்திய செய்தி

### புலிகள் மீளாய்வு

லண்டன், ஜூலை 29

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழு நேற்று இறுதி நோத்தில் புதுடில்லியில் சந்தித்துப் பேசியதாக பி. பி. ஸி. இன்று அதிகாலை அறிவித்தது.

இதனையடுத்து இனப்பிரச்சினை தீர் (4ஆம் பக்கம் பார்க்க)

### எம்.ஜி.ஆர். சென்னை திரும்பினர்

சென்னை, ஜூலை 28

தமிழ்நாடு முதலமைச்சர் எம் ஜி. இராமச்சந்திரன் கடந்த திங்கள் இரவு சென்னை திரும்பினர்.

அதற்கு முன்னர் தனது பனைவி திருமதி ஜானகி இராமச்சந்திரனுடன் ஜனாதிபதி இ.வெங்கட்ராமனைச் சந்தித்து தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

இனப்பிரச்சினைப் பேச்சுக்களில் கலந்து கொள்ளவே திரு. இராமச்சந்திரன் புதுடில்லிக்கு ஞாயிறு சென்றிருந்தார். (இ-எ)

### பண்ருட்டி டில்லியில் தங்கியிருக்கிறர்

புதுடில்லி, ஜூலை 28

தமிழ்நாடு உணவு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் புதுடில்லியில் தொடர்ந்து தங்கியிருக்கின்றர்.

இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சுக்களைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இந்திய அரசு அதிகாரிகள் நடத்துவதற்கு உதவு முகமாகவே அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் புதுடில்லியில் தங்கியிருப்பதாகத் தெரிகிறது. (இ-எ)

## அரசின் யோசனைகள் நச்சுத் தன்மையானவை

### ஈரோஸ் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 29

அரசு முன்வைத்துள்ள இடைக்காலத் தீர்வு (புதிய யோசனைகள்) இனப்பிரச்சினையை சமாதானமாகத் தீர்ப்பதற்காக அல்ல. இந்த நகல் திட்டம் நிறைவேறுமாயின் இலங்கை அரசாங்கத்துக்கே சாதகமாக முடியும். அதனால் இந்த இடைக்காலத் தீர்வு நச்சுத்தன்மை வாய்ந்ததாகும்.

இவ்வாறு ஈரோஸ் இயக்க பொது ஆணைக் குழு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கைப் பிரச்சினை தற்போது ஒரு பிராந்தியப் பிரச்சினையாகி விட்டது. இங்கு இலங்கை அரசானது இதை ஒரு பௌத்த சிங்கள நாடாகக் கொண்டுவர தமிழ் மக்களை நாட்டை விட்டு அப்புறப்படுத்தவும் அமெரிக்க ஊடுருவலுக்கு இடம் கொடுக்கவும் முனைந்து செயல்படுத்து (4 ஆம் பக்கம் பார்க்க)

# தங்களை யாழ் அனுப்புமாறு புலிகளின் தூதுக்குழு கோரிக்கை

## இந்திய அரசு பதில் அளிக்காது மௌனம்

புதுடில்லி, ஜூலை 29

தம்மை யாழ்ப்பாணத்துக்கு திருப்பி அனுப்பி வைக்கும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் தூதுக் குழு விடுத்த வேண்டுகோள் குறித்து இந்திய அரசு இன்னும் பதில் அளிக்கவில்லை.

இப்படி பி. பி. சியின் புதுடில்லிச் செய்தியாளர் மைக் கூல்றிஜ் நேற்று அறிவித்தார்.

சமாதான உடன்பாட்டை நிராகரிப்பதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் திங்கள் இரவு இந்திய அரசுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

அதன்பின்னரே யாழ்ப்பாணத்துக்கு தங்களைத் (4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

29-07-1987

புதன்கிழமை

சுபநேரம்:-
4.33 முதல் 6.03 வரை

ராகுகாலம்:-
12.03 முதல் 1.33 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

ஆடிப்பூரம்

### எதிர்க்கட்சியினருக்கு ராஜீவ் விளக்கம்

புதுடில்லி, ஜூலை 29

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி நேற்று இந்திரா காங்கிரஸ் எம்.பி.க்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆகியோரை அழைத்து உத்தேச இந்திய—இலங்கை ஒப்பந்தம் பற்றி விவரித்தார்.

முதலில் புதுச்சேரி மாநில முதலமைச்சர் பருக் மரைக்காயர், அ. தி. மு. க. எம்.பிக்கள் ஆகியோரை அழைத்து ராஜீவ்காந்தி பேசினர்.

பின்னர் தி. மு. க. எம்.பி.க்களைச் சந்தித்தார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திரா காங்கிரஸ் எம்.பி.க்களுக்கும் புதிய நிலைபற்றி எடுத்துச் (4 ஆம் பக்கம் பார்க்க)

### குடாநாட்டிற்கு இரு அம்புலன்ஸ்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ் ஆஸ்பத்திரிக்கு நேற்று மாலை இரண்டு அம்புலன்ஸ்கள்கொண்டு வரப்பட்டன.

இரண்டு அம்புலன்ஸ்களும்டொயோட்டா ரகத்தைச் சேர்ந்தவை.

இதில் ஓர் அம்புலன்ஸ் போதனா வைத்தியசாலைகள் அமைச்சினால் யாழ். போதனா வைத்திய சாலைக்கு வழங்கப்பட்டது. மற்றையது ஸ்ரீ லங்கா செஞ்சிலுவைச் சங்கத்தினால் பருத்தித்துறை வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு அம்புலன்ஸ்களையும் யாழ். செயலக பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. ரி. குலசேகரம் கொழும்பு சென்று கொண்டு (4 ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத்தமிழர்களுக்கு இந்தியா துரோகம் இழைத்துவிட்டது

## புதுடில்லியில் பிரபா விடுத்துள்ள செய்தி



புதுடில்லி, ஜூலை 29

இந்தியா ஈழத் தமிழர்களுக்குத் துரோகம் செய்துவிட்டது.

— இப்படி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் நேற்று புதுடில்லியில் விடுத்த செய்தி ஒன்றில் தெரிவித்திருக்கின்ருர்.

"துரோகத்தனத்தை அனுமதிக்க முடியாது" என்ற தலைப்பில் விடுக்கப்பட்ட அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;-

இந்தியப் பிரதமர் எம்முடன் சில விடயங்கள் பற்றிப் பேச விரும்புகிருர் என்று சொல்லி மட்டுமே எம்மை இந்தியாவுக்கு அழைத்து வந்தார்கள். தற்போதைய யோசனை குறித்து எதுவும் சொல்லவில்லை.

புதுடில்லிக்கு வந்த பின்னர் கூட யோசனை பற்றிய பிரதி ஒன்றை எமது கைக்குத் தந்துவிட்டு உடனடியாக அதனை வாங்கிச் சென்றுவிட்டனர். சரியாகப் படிப்பதற்குக் கூட அது தரப்படவில்லை. அது இரகசியமான பிரதி எனக் கூறி உடனேயே வாங்கிச் சென்றுவிட்டனர்.

எம்மை முற்று முழுதாக ஏமாற்றியே இங்கு அழைத்து வந்துள்ளனர். நாம் இந்தியாவுக்கோ, ராஜீவுக்கோ எதிரானவர்கள் அல்லர். ஆனல் இந்திய அரசு எமக்குத் துரோகம் செய்வதை அனுமதிக்க முடியாது. இவ்விடயத்தில் இந்தியா தமிழ் மக்களுக்கு துரோகம் செய்துவிட்டது.

நாம் எமது மக்களைப் பாதுகாப்பதற்காக கையில் ஏந்திய ஆயுதத்தை ஒருபோதும் ஒருவரிடமும் ஒப்படைக்க மாட்டோம்.

இந்திய இராணுவம் வந்து எமது ஆயுதங்களைப் பறித்து எடுத்தால், அதன் பின்னர் ஸ்ரீலங்கா அரசினுல் தமிழ் மக்களுக்கு ஏற்படும் தொல்லைகள், இராணுவ அட்டூழியங்கள், பாதுகாப்பின்மை என்பவற்றிற்கு (4 ஆம் பக்கம் பார்க்க)

● கட்டடங்கள், வாகனங்களுக்குத் தீவைப்பு!

# கொழும்பு நகரில் பெரும் கலவரம்!

## பொலீஸ் சுட்டதில் 18 பேர் மரணம்!

கொழும்பு, ஜூலை 29

கொழும்புநகரில் நேற்று பெரும் கலவரம் உண்டாகியது.

புதிய சமரச உடன்பாட்டை எதிர்த்து, நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தியோர்மீது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் சுமார் பதினெட்டுப் பேர்வரை உயிரிழந்தனர்.

நூற்றுக்கும் அதிகமானோர் வரையில் காயமடைந்தனர்.

புறக்கோட்டைப் பகுதியில் நேற்று சுமார் ஆயிரம் பிக்குகள் வரையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கானேர் அப்பகுதியில் திரளத் தொடங்கினர்.

அங்கு கூடிய சுமார் ஐயாயிரம் ஆர்ப்பாட்டக்காரர்கள் பரவலாக வன்முறையில் ஈடுபட ஆரம்பித்தனர்.

பஸ்கள், தனியார் கார்கள் பல தீக்கிரையாக்கப்பட்டன.

அரச கட்டடங்கள் பல சேதப்படுத்தப்பட்டன.

கடைகள், வர்த்தக நிலையங்கள் மீது கற்கள் வீசி சேதப்படுத்தப் பட்டன.

கடைகளைக் கொள்ளையடிப்பதிலும் சில கோஷ்டிகள் ஈடுபட்டன.

இளைஞர்கள் பலர் கைகளில இரும்புக் கம்பிகள், தடிகள், சைக்கிள் செயின்களுடன் கடைகளை உடைப்பதிலும், கொள்ளை அடிப்பதிலும் ஈடுபட்டிருந்தனர்


ஜனாதிபதி மாளிகையில் இருந்து சில யார் தூரத்திலும் கலகக்காரர்கள் வன்செயலில் ஈடுபட்டனர்.

உள்நாட்டு அமைச்சுக் கட்டடம், வைத்திய பயிற்சிநிலையக் கட்டடம் உட்பட பல அரச கட்டடங்கள் தாக்கப்பட்டு எரிக்கப்பட்டன.

செய்தி ஏஜன்ஸி ஒன்று தாக்கப்பட்டது. வெளிநாட்டுச் செய்தியாளர்கள் சிலர் தாக்கப்பட்டனர்.

சுமார் ஐந்து மணித்தியாலங்கள் வரை இவ் வன்செயல்கள் இடம் (4 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அதுசரி, ஒப்பந்தத்தில கையொப்பம் போடுறதுக்கு ஜே. ஆர். அங்கை போகாமல், ராஜீவ் ஏன் இஞ்சை வாருர்...? என்னெண்டு ஒருத்தருக்கும் விளங்கயில்லையாம்.

### காலையில் ராஜீவ் வருகிறர்

கொழும்பு, ஜூலை 29

இன்று புதன்கிழமை காலை 9 40 மணியளவில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொழும்பு வருகின்ருர்.

ஜனாதிபதி மாளிகை முன்பாக அவருக்குப் பொது வரவேற்பளிக்கப் படும்.

இதற்காக விசேட மேடை அமைக்கப்பட்டு வருகின்றது. (உ-எ)

### தமிழர்வாழும் பகுதிகளில் பாதுகாப்பு

கொழும்பு, ஜூலை 29

கொழும்பு மாநகரில் உள்ள தமிழர் பகுதிகள் இராணுவத்தாலும் பொலீஸாராலும் சுற்றிவளைக்கப்பட்டு பாதுகாப்பளிக்கப்படுகின்றது.

நேற்று நடந்த கலகம் (4 ஆம் பக்கம் பார்க்க)

### ● ஸ்ரீமாவும் காயம்

கொழும்பு, ஜூலை 29

கொழும்பு நகரில் நேற்று நடந்த ஆர்ப்பாட்டத்தின்போது மக்கள் மத்தியில் சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் காணப்பட்டார் என்று ஒரு செய்தி கூறுகின்றது.

பிக்குகளுடன் சத்தியாக்கிரகம் இருந்த திருமதி பண்டாரநாயக்காமீது கண்ணீர்ப் புகைக்குண்டு விழுந்ததைத் தொடர்ந்தே அவருக்குக் காயம் ஏற்பட்டது

50க்கும் அதிகமான பஸ்கள் எரிக்கப்பட்டன. கல்வி அமைச்சு அலுவலகம் சேதமாக்கப்பட்டது.

— இப்படி அந்தச் செய்தி மேலும் தெரிவித்தது. (உ-எ)

### 12 மணி நேர ஊரடங்கு

கொழும்பு, ஜூலை 29

கொழும்பு மாவட்டத்தில் நேற்று மாலை 6 மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்தது.

இன்று காலை 6 மணியுடன் ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும்.

ஜெயவர்த்தனபுர — கோட்டே நகரசபைப் பகுதியில் நேற்றுப் பகல் ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. (உ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ்சிறு ★
★ விளம்பரம் ★

**சேவை**

தரமான போட்டோ ஸ்ரட் (Photostat) பிரதிகளுக்கு கிவீ போட்டோ 380, அஸ்பத்திரி வீதி, (ஸ்ரேசன் சந்தி) யாழ்ப்பாணம். (1361)

**மணமகள் தேவை**

லண்டனில் நிரந்தரமாக வசிக்கும் 30 வயது இந்து வேளாள, செவ்வாய் தோஷமற்ற M. Sc. பொறியியலாளருக்கு பெற்றுர் அதே குலத்தில் டாக்டர், கணக்காய்வாளர் முதலிய உயர்கல்வி படித்த மணமகளை விரும்புகின்றனர். விளம்பர எண்: 61. மே/பா. உதயன், யாழ்ப்பாணம். (1370)

**சேவை**

கஜேந்திராஸ் சைக்கிள் வேக்ஸ் - எமது நிலயத்தில் சைக்கிள் திருத்துவதற்காக அண்மைக் காலத்தில் அதிகரிக்கப்பட்ட கூலி மீண்டும் வழமைக்குத் திரும்பிவிட்டது உங்கள் பழைய சைக்கிள்களை பெயின்ரிங் செய்யவும் திருத்திக் கொள்ளவும் இன்றே நாடுங்கள்.

கஜேந்திராஸ் சைக்கிள் வேக்ஸ், அம்பிகா ஸ்ரோர்ஸ், சட்டநாதர், சைவப்பிரகாச வித்தியாசாலை, (அருகாமை) வேலணை 5. (1368)

**தவறிவிட்டது**

ட்ரமலிங்கம் குகதாசன் என்பவருடைய இல 51256942V அடையாள அட்டை யாழ். கச்சேரிக்கும் ஆரியகுளம் சந்திக்கும் இடையில் மினி பஸ்ஸில் பயணம் செய்த போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.431/1, நாவலர் வீதி, நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்குவதுடன் நன்றியறிதலுள்ளவராகவும் இருப்போம் (1369)


# அகதி முகாம்களில் தொற்று நோய் அபாயம்

வடமராட்சி, ஜூலை 29

வரணி மிஷன் திருச்சபைக்கு அண்மையில் உள்ள அகதி முகாம்களில் தொற்று நோய்கள் பரவி வருகின்றன.

சிரங்கு, கொப்பிளிப்பான், வயிற்றோட்டம் போன்ற நோயினால் அகதிகள் சிலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நூற்றுக்கணக்கான வடமராட்சி அகதிகள் வசிக்கும் இந்த முகாம்களில் சுகாதாரம் இன்மையாலேயே இந்த நோய்கள் ஏற்படுகின்றன என்று கூறப்படுகிறது. (இ-160)

## விசாரணையின்பின் விடுவிப்பு

திருகோணமலை ஜூலை 29

பாதுகாப்புப்படையினரால் கைதுசெய்யப்பட்ட திருகோணமலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளர் திரு. செ. சண்முகசுந்தரம் ஒருவார காலம் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார்.

இவரின் விடுதலை தொடர்பாக திருமலை பிரசைகள் குழு தீவிர நடவடிக்கை எடுத்தது.

ஓராண்டுக்கு முன்னர் இக்கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றிய ஊழியர் ஒருவரான திரு. ஸ்ரீஸ்கந்தராசா என்பவரை பாதுகாப்பாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினர் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர் மீது விசாரணை நடத்தப்பட்டதாகத் தெரிகின்றது. (உ-எ-150)

## முஸ்லிம் ஊர்காவலர் ஐ. தே. கவுக்கு எதிராகப் போர்க்கோலம்

மட்டக்களப்பு, ஜூலை 29

அம்பாறை பிரதேச சபைத் தேர்தலில் ஐ. தே கவுக்கு எதிராக முஸ்லிம் ஊர்காவல் படையினர் பிரசாரம் செய்து வருகின்றனராம்.

அக்கரைப்பற்று நகரில் கடமையாற்றும் ஊர்காவல் படையினரே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அண்மையில் இவர்கள் அக்கரைப்பற்று நகரில் சுவரொட்டி ஒட்டிய ஐ. தே க. ஆதரவாளர்களைத் தாக்கி சுவரொட்டிகளையும் கிழித்தெறிந்தனர்.

இவ்விடயம் குறித்து பொத்துவிலில் முதலாவது எம். பி ஜனாப் உதுமா லெப்பை உள்ளூர் பாதுகாப்பு அமைச்சிடம் புகார் செய்துள்ளார் (இ-21)

## மானிப்பாய் மெமோறியலில் ப. மா.ச. கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலைப் பழைய மணவர் சங்கப் பொதுக் கூட்டம் கல்லூரியின் அழகரத்தினம் மண்டபத்தில் தலைவர் திரு பொ. காங்கேசு தலைமையில் நடைபெற்றது.

கூட்ட ஆரம்பத்தில் சங்கத்தின் நீண்டகாலத் தலைவராக இருந்து மறைந்த பல்கலைமணி க. தப்பிராசா முன்னாள் ஆசிரியர்களான திரு. க. சின்னத்துரை, திருமதி ஆர். ஏ. ஜெயநாயகம் ஆகியோருக்கு இரண்டு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பாடசாலையின் வளர்ச்சிக்கு பழைய மாணவர் சங்கத்தின் பங்களிப்பு இன்றியமையாதது. எங்கள் இனத்தின் அறிவு விருத்திக்கு மூலகாரணமாகவுள்ள பாடசாலைகளை வலுப்படுத்துவது எமது கடமையாகும் என சங்க இணைப்போஷகரும் பிரபல சட்டத்தரணியுமான திரு சிவா இராசேந்திரம் குறிப்பிட்டார். (இ)

## கிளிநொச்சியில் கொள்ளை கோஷ்டிகளின் அட்டகாசத்துக்கு முற்றுப்புள்ளி

கிளிநொச்சி ஜூலை 29

கிளிநொச்சியில் கடந்த சில மாதங்களாக அட்டகாசம் புரிந்து வந்த கொள்ளைக் கோஷ்டிகளை பொதுமக்கள் கண்டுபிடித்து தக்க பதிலடி கொடுக்க ஆரம்பித்துள்ளனர்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் கிளிநொச்சியில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக பொதுமக்கள் கிளிநொச்சி, திருநகர், பரவிப்பாஞ்சான், கனகபுரம், கணேசபுரம், இரத்தினபுரம் போன்ற கிராமங்களிலிருந்து இடம் பெயர்ந்து வேறு இடங்களில் புகலிடம் தேடியிருந்தனர்.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அனேகமான வீடுகளில் இருந்த பொருள்கள் திருடப்பட்டிருந்தன பின்னர் இப் பகுதிகளில்பொதுமக்கள் கடந்த ஏப்பிரல் மாதம் முதல் மீண்டும் குடியமர ஆரம்பித்தனர்

இவ்வேளையில்மீண்டும் திருடர்கள் பல இடங்களிலும் தமது கைவரிசைகளைக் காட்ட ஆரம்பித்தனர்.

கடந்த ஏப்பிரல்மாதம் முதல் ராணுவ பாணிகளிலும், இயக்கப் பாணிகளிலும், கிளிநொச்சியிலும் அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் சுமார் நூறுக்கு மேற்பட்ட கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றன.

இரவு வேளையில் இராணுவ பாணியில் செல்லும் இக்கோஷ்டியினர் பல இடங்களில் தகாத முறைகளில் நடந்து கொண்டனர் என்றும் கூறப்படுகிறது.

இதனால் கிளிநொச்சி பொதுமக்கள் பீதி அடைந்திருந்தனர். தற்போது கொள்ளைக் கோஷ்டியை பிடிக்கும் முயற்சியில் பொது மக்கள் இறங்கி உள்ளனர் (இ-76)

## பயிற்சியை முடித்த 78 கிராம சேவையாளர்

வேலணை, ஜூலை 29

யாழ் மாவட்டத்தில் விசேஷ சேவை உத்தியோகத்தர்களாக கடமையாற்றி கிராமசேவை அலுவலர்களாக பதவி மாற்றம் பெற்றவர்களுக்கு யாழ் செயலகத்தில் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன.

பயிற்சி பெற்ற 78 கிராம சேவை அலுவலர்களுக்கு நியமனப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இவ்வைபவத்தில் யாழ் அரசாங்க அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம் சகல கிராமசேவை அலுவலர்களுக்கும் நியமனப் பத்திரங்களை வழங்கினார்.

நியமனப் பத்திரங்கள் வழங்கும் வைபவத்திற்கு மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. இராமநாதர், தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு. கே. கோபாலரத்தினம், யாழ் செயலக உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சபாபதிப்பிள்ளை, மாவட்ட காணி உத்தியோகத்தர் திருமதி சி. ராமச்சந்திரன் உட்பட பல உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (இ 167)

## இந்திய உதவி இன்றி

# யுத்தத்திலும் வெல்ல முடியாது; சமாதானமும் காண முடியாது!

- ரொனி

கொழும்பு, ஜூலை 29

இந்தியாவின் உதவி இன்றி யுத்தத்தில் நாம் வெல்ல முடியாது; சமாதானத்தையும் காண முடியாது.

இப்படிச் சொன்னார், நிதி அமைச்சர் ரொனி டி மெல்.

மகாஹம என்னும் இடத்தில் நடந்த கூட்டத்தில் அமைச்சர் ரொனி டி மெல் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

வன் செயல்கள் காரணத்தினால் நெல் உற்பத்தி 30 சத வீதத்தினால் வீழ்ச்சி அடைந்து விட்டது மீன் உற்பத்தி 50 சத வீதம் குறைந்து விட்டது.

தற்போதைய சமாதான நடவடிக்கைக்கு முட்டுக்கட்டை போடுபவர்கள் நாட்டின் இறைமையை அழிப்பதற்கும் நாட்டைப் பிரிப்பதற்கும் உதவுபவர்களே

இப்படி அமைச்சர் சொன்னார். (இ-எ)

## அபிவிருத்திப் பணியில் மக்கள் ஒன்றியம்

கொடிகாமம், ஜூலை 29

நாட்டின் அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்ற மக்கள் ஒன்றியம் போல வேறு எதுவும் இல்லை.

மந்துவில் மக்கள் ஒன்றிய ஆண்டுப் பொதுக் கூட்டம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடந்தது.

கிராமசேவையாளர் திரு சு. இந்திரராசா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

மந்துவில் பகுதிக்கு மேலும் வந்து கொண்டிருக்கும் அகதிகளுக்கு உதவ வேண்டும் என்றும் சிரமதானம் மூலம் கிராம அபிவிருத்திகளைக் கவனிக்க வேண்டுமென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (இ-75)

## அகதிகள் புனர்வாழ்வு அமையம் நன்றி

யாழ்ப்பாணம், ஜூலை29

வடமராட்சி, வலிகாமம் பகுதிகளில் பாதிக்கப்பட்டு அகதிமுகாம்களில் தங்கியுள்ள 60 ஆயிரம் பேருக்கு நிவாரணம் வழங்க உதவிய சகல ஸ்தாபனங்களுக்கும் பொதுமக்களுக்கும் யாழ். பல்கலைக்கழக அகதிகள் புனர்வாழ்வு அமையம் நன்றி தெரிவித்திருக்கின்றது.

பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள், தமிழர் அகதிகள் புனர்வாழ்வு அமையம், தனியார் போக்குவரத்துச் சங்கம் மற்றும் பொதுஸ்தாபனங்கள் ஆகியவற்றின் பூரண ஒத்துழைப்பினாலேயே மிகக் குறுகிய காலத்தில் இப் பெரிய நிவாரணப் பணியைச் செய்யமுடிந்தது.

இப்படி அமையம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (இ-எ)

## மன்னாரில் கடத்தப்பட்ட

# போக்குவரத்துச் சபை அதிகாரியை விடுவிக்குமாறு ஊழியர்கள் கோரிக்கை

மன்னார், ஜூலை 29

கடத்திச் செல்லப்பட்ட பிராந்திய போக்குவரத்துச் சபையின் மன்னார், வவுனியா சாலைகளின் இணைப்பதிகாரி ஜனாப் எம். ஏ. சபூரை விடுவித்து உதவும்படி சம்பந்தப்பட்டவர்களுக்கு மன்னார் வ. பி. போ. ச. ஊழியர்கள் வேண்டுகோள் விடுத்து உள்ளனர்.

ஜனாப். எம். ஏ. சபூர் இணைப்பதிகாரியாக வந்த பின்னர் நியாயமான பஸ்கள் மன்னாரில் சேவைக்கு விடப்பட்டன

அவரின் காலத்தில் தான் மன்னார்சாலையின் வருமானத்தில் இருந்து ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கும் நிலை உருவானது.

இப்படி சேவைமனப்பான்மையுடன் பணி புரிந்தவரை விடுக்கும்படி வேண்டுகின்றோம்.

வ. பி. போ. ச. மன்னார் சாலை ஊழியர்கள் விடுத்த வேண்டுகோளில் முன்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. (உ-எ)

## மக்கள் முகம்

### பொது நலசேவை இளைஞர் மன்றம்

யாழ்ப்பாணம், ஜூலை29

கொக்குவில் மேற்கு காந்திஜி சனசமூக நிலையத்தில் பொது நலச் சேவை இளைஞர் மன்றம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

நிர்வாகிகள் பின்வருமாறு; தலைவர் ச. சண்ணன், செயலாளர்: கே. ஜெயதீஸ்வரன், உ. த. க. சுரேஸ்காந்தன், உ. செ. நா. சுவேந்திரன்.

9 பேர் கொண்ட உப குழு ம. தெய்வஸ்ரீ தலைமையில் தெரிவுசெய் யப்பட்டது. (இ)

### நெதர்லாந்து கூரைசீற் வழங்கும்

குருநகர் ஜூலை 29

சர்வோதய அமைப்பின் வேண்டுகோளுக்கு இணங்க நெதர்லாந்து நிறுவனம் ஒன்று வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க முன்வந்துள்ளது.

இருபது லட்சம் ரூபா பெறுமதியான அஸ்பெஸ்டஸ் கூரை சீற்றுகளை அது வழங்கும்.

கூரை சீற்றுகள் முதலில் வவுனியா, வடமராட்சி. திருகோணமலைப் பகுதிகளுக்கே வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-51)

### நூல் வெளியீட்டு விழா

வட்டுக்கோட்டை, ஜூலை 29

வட்டுக்கோட்டை கலாநிலைய முதல்வரும் முன்னாள் அதிபருமான திரு. க கயிலாயநாதன் எழுதிய 'திருப்பொற் சுண்ண விளக்க'' நூல் வெளியீட்டு விழா இன்று 29 ஆம் திகதி புதன் கிழமை ஆடிப்பூரத் திருநாளன்று காலை 10-30 மணியளவில் சண்டிலிப்பாய் சீரணி அருள்மிகு நாகம்மாள் ஆலயத்தில் இடம்பெறும்.

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபரும் பிரபல எழுத்தாளருமான திரு. து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் சண்டிலிப்பாய் சீரணி அருள்மிகு நாகம்மாள் ஆலய தரும கர்த்தாச் சபைச் செயலாளர்புலவர் வே. கனகசபாபதி வரவேற்புரை நிகழ்த்துவார்.

அகில இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ். கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் திருவாட்டி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர் (இ161)

### அஞ்சலிக் கூட்டம்

வட்டுக்கோட்டை, ஜூலை 29

முன்னாள் மாவட்ட சாரண ஆணையாளர் அமரர் இரத்தினம் விசுவநாதன், மாவட்டச் சாரணர் கிளைச் சங்க உபதலைவர் அமரர் முத்தையா சிவராசா (வீமன் காமம் மகாவித்தியாலய அதிபர்) ஆகியோருக்கான அஞ்சலிக்கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறும்.

மாவட்ட ஆணையாளர் திரு. என். போஜன் தலைமையில் இளவாலை றோமன் கத்தோலிக்க ஆண் பாடசாலையில் நடைபெறும். இந்த அஞ்சலிக்கூட்டத்தில் சகல சாரணர் குழுக்களின் ஆசிரியர்களையும் சாரணர், குருளைச் சாரணப் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ161)

### திருமலை நகரசபைத் தலைவர்

திருகோணமலை, ஜூலை 29

திருகோணமலை நகரசபையின் புதிய தலைவராக திரு டபிள்யூ. ஜெயசூரியா நியமிக்கப்பட்டார்.

நகரசபைக்கு போட்டி இன்றித் தெரிவு செய்யப்பட்ட ஐக்கியதேசியக்கட்சி உறுப்பினர் பட்டியலில் இவருக்கு முதலாவது இடம் வழங்கப்பட்டிருந்தது.

உபதலைவராக திரு. ரஞ்சித் வின்சென்ட் ஜெயசிறி நியமிக்கப்பட்டார். (உ-எ-150)

### சுட்டுக் கொலை!

திருகோணமலை, ஜூலை 29

திருகோணமலை தொலைத்தொடர்பு மத்திய நிலையத்தில் காவலாளியாகப் பணியாற்றி வந்த 3 பிள்ளைகளின் தந்தை எம். ரவீந்திரன் (வயது 42) கடந்த 22 ஆம் திகதி இனம் தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சம்பவதினம் இரவு இவர் மாணிக்கவாசகர் வீதியில் உள்ள தனது வீட்டுக்குச் சென்று இரவு உணவு சாப்பிட்டு விட்டு திரும்பிக் கொண்டிருந்தார்.

தொலைத் தொடர்பு அலுவலகத்துக்குச் சற்றுத் தொலைவில வந்து கொண்டிருந்த இவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார் (உ-எ-150)

### தினமும் சென்று வருகின்றனர்

கொடிகாமம், ஜூலை 29

கொடிகாமத்தில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ள வடமராட்சி அரசாங்க உத்தியோகத்தர்கள் பலர் தினமும் கடமைக்குச் சென்று திரும்புகின்றனர்.

ஆனால் தமது பழைய இடங்களில் அவர்கள் தங்குவதில்லை. (இ-75)

### ஐ. தே. க. தலைவர்களே தெரிவு

திருகோணமலை, ஜூலை29

திருகோணமலை மாவட்டத்தில் கோமரங்கடவல, பதவி - சிறிபுர, சேருவில, திருகோணமலை நகரம் ஆகிய பிரதேச சபைகளுக்கு ஐ. தே கட்சியைச் சேர்ந்த வர்களே தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (உ-எ-150)

## 'யாழ் அவலக் கோலங்கள்''

# சரித்திரத்தை அறிய ஒரு தடயப் பொருள்

யாழ்ப்பாணம், ஜூலை29

''யாழ்ப்பாண அவலக் கோலங்கள்'' வீடியோ விவரணப்படம் எமது எதிர்காலச் சந்ததியினர் சரித்திரத்தை அறிந்து கொள்ள ஒரு தடயப் பொருளாக இருக்கும்.

நாவலர் கலாசார மண்டபத்தில் 'யாழ்ப்பாண அவலக் கோலங்கள்'' என்ற வீடியோ விவரணப் படத்தை ஆரம்பித்து வைக்கு முன்னர் யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் இவ்வாறு குறிப்பிட்டார்.

வர்த்தக சங்கத் தலைவர் திரு ஆ. க. நடராசா தலைமை வகித்தார்.

ஆணையாளர் மேலும் பேசுகையில் ''யாழ். வர்த்தகர் சங்கம் எடுத்த இந்த முயற்சி முன்மாதிரியானதாகும். எமது அவலங்களை வெளியுலகத்தினரும் அறிந்து கொள்வதற்கு இதுவே பேருதவியாக இருக்கும்.

இந்த மண்டபமே ஓர் அவலக் கோலமாகக் காட்சியளிக்கிறது. மற்றவர்களின் அவலங்களை நாம் என்ன பார்ப்பது? என்ற இந்த நிலை மாற வேண்டும்'' என்றார்.

படத்தின் 90 சத வீதமான காட்சிகள் வர்த்தக நிலையங்களின் இடிபாடுகளை காட்டுவதாகவே இருந்தன. சில ஆலயங்கள். பாடசாலைகள், மருந்தி ஆகியவற்றின் சேதங்களும் படத்தில் இடம் பெற்றிருந்தன.

கவிஞர் இ. முருகையன், கலாநிதி சோ. கிருஷ்ணராஜா, கல்வயல் வே. குமாரசாமி ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

படத்தின் தயாரிப்பாளர் திரு. சக்தி ஜெகநாதன் பதிலுரை நிகழ்த்தினார்.

வர்த்தகசங்கச் செயலாளர் திரு. சி. நமசிவாயம் நன்றியுரை கூறினார். (இ-ஒ)

# தமிழருக்குரிய உரிமை கிடைத்தால் முஸ்லிம்களுக்கும் நன்மை

## பிரதியமைச்சர் மஜீத் கூறுகின்றார்

அம்பாறை, ஜூலை 29

''இந்த நாட்டில் தமிழுக்கு உரிய அந்தஸ்து கிடைக்குமானால், அந்த மொழியைப் பேசும் முஸ்லிம்களுக்கும் அது நன்மை பயக்கும். தமிழ் மக்களுக்கு உரிமை கிடைக்குமானால் அதனால் நாமும் விமோசனம் அடைவோம்.''

—பிரதி தபால், தந்தித் தொடர்புகள் அமைச்சரும், சம்மாந்துறைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீத் மேற்கண்டவாறு கூறினார்.

சம்மாந்துறை 4 ஆம் பிரிவில் நடைபெற்ற பிரதேசசபைத் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

''நாட்டின் இனப்பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட்டு எமது சிறுபான்மை மக்களுக்குச் சுயாட்சி கிடைக்கப் போகிறது.

மேலும் நாட்டின் பிரச்சினையான இச்சூழ்நிலை காரணமாக தமிழ் மக்கள் பிரதேசசபைத் தேர்தல்களில் பங்குபற்றவில்லை.

எனினும் சமாதானமான சமரசத்தீர்வு ஏற்பட்டு அமைதி பேணப்படுமானால் ஒவ்வொரு பிரதேச சபைகளிலும் தமிழ் மக்களுக்குரிய பிரதிநிதித்துவத்தை, நாம் விட்டுக் கொடுக்க வேண்டும்.

—இப்படி அவர் கூறினார். (உ-14)

# காங்கேசன்துறையில் பாதிக்கப்பட்டோருக்கு இந்திய நிவாரணப் பொருள்

காங்கேசன்துறை. ஜூலை 29

காங்கேசன்துறை கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆகஸ்ட் 1ஆம் 2ஆம் திகதிகளில் இந்திய நிவாரண பொருள்கள் வழங்கப்பட உள்ளன.

இதற்கு முன்னோடியாக மேற்படி நிவாரணத்திற்குரிய அனுமதிப் பத்திரங்கள்இன்று புதன் கிழமை மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் வழங்கப்படும். ஏனைய பகுதிகளில் இந்திய நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்நிவாரணத்தைப் பெற முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிவாரணப் பொருள் விநியோகம் ஆகஸ்ட் 1ஆம், 2ஆம் திகதிகளில் தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தில் இடம் பெறும்.

இதற்கான ஏற்பாடுகளைக் காங்கேசன்துறை கிராமசேவையாளர் மு. [illegible] செய்துள்ளார். (இ-68)

## நன்றி வழிபாடு

**சகோதரி எலிசபேத் பேக்கர் அம்மையார்**

காலம்சென்ற சகோதரி எலிசபேத் பேக்கர் அம்மையாரின் வாழ்வுக்காகவும் அன்னாரின் சேவைகளுக்காகவும் இறைவனுக்கு நன்றிசெலுத்தும் ஓர் ஆராதனை பரந்தன் நவஜீவன புனித சிற்பாசாரியார் ஆலயத்தில் எதிர்வரும் 01-08-87 (சனிக்கிழமை) காலை 9-30 மணிக்கு இடம் பெறும். நண்பர்கள் இறைவனுக்கு நன்றிசெலுத்த அழைக்கப்படுகின்றீர்கள்.

நவஜீவன அன்னியோனியம்
பரந்தன் - 3.

(1363)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

பாம்புகளும் பாச்சாக்களும் இருக்கும் ஒரு பழைய வீட்டில் குடியிருந்தால் எவ்வளவு ஜாக்கிரதையாக இருப்போமோ, அப்படியே வாழ்க்கையில் காமமும் லோபமுமாகிய விஷப் பொருள்களைப் பற்றி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். — ராஜாஜி


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073

29 07.1987 க.பெ.இல: - 23


## மனவிருப்பம் இல்லாத அவசரக் கல்யாணமா?

'சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்த்தது போல...' என்பது ஓர் உவமான வாக்கியம்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஸ்ரீலங்கா அரசு முன்வைத்த புதியயோசனை, அதனை உள்ளடக்கியதாகக் கூறப்படும் உத்தேச ஒப்பந்தம், அந்த ஒப்பந்தத்திற்கு தமிழர் தரப்பில் இருந்து கிடைத்துவரும் எதிர்ப்பு, தென்னிலங்கைப் பக்கத்தில் இருந்து கிடைத்துவரும் எதிர்ப்பும்.ஆகரவும் நிச்சயமாக சாமான்யன் ஒருவனுக்கு சிதம்பர சக்கரத்தைப் பார்ப்பது போன்றதே!

இத்தகைய மயக்கத்தையும் குழப்பத்தையும் கொடுத்து, நீண்டகால இனப்பிரச்சினைக்கு, அவசர அவசரமாக ஓர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டுமா? பாதிக்கப்பட்ட சாராரான தமிழருக்கு, அவர்கள் எதிர்பார்த்த எதையுமே சரியாக வழங்காத ஒப்பந்தம் ஒன்று அவசரமாக அவசியம் தானா?

இனப்பிரச்சினை விவகாரத்தில் ஸ்ரீலங்கா அரசு மாப்பிள்ளை என்றால் ஈழத் தமிழர் மணமகள் ஆவர். இவர்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைக்கும் தரகர் ஸ்தானமே இந்தியாவுக்கு.

ஆனால் இன்றைய தினம், மணமகள் இல்லாமலே மாப்பிள்ளையும், தரகரும் திருமணப் பதிவில் ஒப்பம் இடப்போகின்றனர். மணமகள் கையொப்பம் இடாத திருமணப் பதிவு செல்லுபடியாகுமா? அப்படியானால் ஏன் இந்த அர்த்தமில்லாத அவசரக் கலியாண எழுத்து?

மணமகளான தமிழரின் அவலங்களை, துன்பங்களைப் போக்கி அவளுக்கு வாழ்வளித்துத் திருமணம் செய்து கொடுக்கும் தரகாகவே இந்தியா விளங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மணமகளை நட்டாற்றில் விட்டுவிட்டு, தரகரே திருமணப் பதிவில் ஒப்பமிட முன்வந்து விட்டார்! இதன் நோக்கம் எவருக்கும் புரிவதாக இல்லை!!

தமிழர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான விடுதலை இயக்கமான விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா அரசின் புதிய யோசனைகளை நிராகரித்து விட்டனர். அவர்கள் பக்கம் நியாயம் இருப்பதை எவரும் புரிந்து கொள்ள முடியும்.

1977 இல் தமிழ்மக்கள் கேட்டது தனித் தமிழீழம். பிரதேச சுயாட்சியும், சமஷ்டியும் கேட்டுக் கிடைக்காத பட்சத்தில்தான் 1977 இல் அந்த முடிவுக்கு அவர்கள் வந்தார்கள்.

அரசின் புதிய யோசனையில், அவற்றில் எதுவுமே உருப்படியாக இல்லை. மத்திய அரசின் கையில் நாணயக் கயிற்றைக் கொடுத்து அது கம்போச்சுவதற்கு ஏற்ப ஓடவேண்டிய மாடுகளாகத் தமிழர்களை மாற்றும் மாகாண ஆட்சியே புதிய யோசனையிலும் உண்டு. மேலதிகமாக வடக்கும் கிழக்கும் தற்காலிக இணைப்பு. அவ்வளவுதான். அதனை உறுதி செய்ய வேண்டி சர்வஜன வாக்கெடுப்பு. சர்வஜன வாக்கெடுப்புக்கு மாவட்ட சபைத் தேர்தல் போல நடக்காது என்பது என்ன உறுதி?

இத்தனை காலத்துக்குப் பிறகு தமிழர்களுக்குத் தரும் அற்ப சலுகையைக் கூட கெட்டியான, உறுதியான சலுகையாகத் தர ஸ்ரீலங்கா அரசு விரும்பவில்லை!

ஒப்பந்தம் கைச்சாத்தான ஆறு வாரங்களின் பின்னர் தான், உத்தேச மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் பற்றி முடிவு செய்யப்பட உள்ளது. இதுவும் குதிரைக்கு முன்னர் வண்டியைப் பூட்டும் தந்திரம்— சூழ்ச்சி அல்லவா?

இத்தனைக்கும் மேலாக, ஒப்பந்தம் கைச்சாத்தானதும் போராளிகள் ஆயுதங்களைக் கீழே போடுவதல்ல, அரசிடம் ஒப்படைக்க வேண்டுமாம்.

இது, நிச்சயமாக, தான் வழங்க நினைக்கும் அற்பசொற்ப சலுகைகளை மட்டுமே, தமிழர்கள் மீது திணிப்பதற்கான நயவஞ்சகம். தமிழ்ப் போராளிகளை நிராயுதபாணிகளாக்கி விட்டு, அவர்களைப் பலவீனப்படுத்தி, உரிமைப் போராட்டத்தை முறியடித்து அடிமைப்படுத்தும் முயற்சி. தாம் இதுவரை நடத்தி வந்த ஆயுதப் போராட்டம் மூலம் சாதிக்க முடியாததை பேச்சுவார்த்தை மூலம் சாதிக்கும் கபடமான ராஜதந்திரம்!

எனவே புலிகள் தரப்பில் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகள் நியாயமானவை. அவற்றைச் சாதகமான பக்கத்தில் நின்று பரிசீலனை செய்வது இந்தியாவின் பொறுப்பு.

விருப்பமில்லாக் கல்யாணத்தை அவசரமாகச் செய்து வைக்கக் ''குதிப்பதை''விட இந்தியா ஒன்றைச் செய்யலாம். இரு தரப்பாரையும் யுத்த நிறுத்த நிலைக்கு வரச் செய்து நியாயமான ஒரு தீர்வைக் கொண்டுவர உதவலாம். கடைசி நேரத்திலாவது இந்தியா இதனை உணருமா?

வளைகுடாவில்

## முழு அளவிலான யுத்த நிறுத்தமே சமாதானத்தை ஏற்படுத்தும்

பக்தாத், ஜூலை 28

முழு அளவிலான யுத்த நிறுத்தமே வளைகுடாவில் சமாதானத்தை ஏற்படுத்தும்.

இப்படி ஈராக் அறிவித்திருக்கின்றது.

ஐ நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தை ஏற்று ஈராக் யுத்த நிறுத்தத்தைக் கடைப் பிடிக்குமா? என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் ஈராக் வெளிநாட்டமைச்சர் இத் தகவலை வெளியிட்டார்.

ஒரு பகுதியினர் மட்டும் யுத்தத்தில் ஈடுபடுவது ஈரானுக்கு உதவுவதாகவே முடியும் என்றும் ஈராக் வெளிநாட்டமைச்சர் தெரிவித்தார்.

ஐ நா. பொதுச் செயலாளரிடம் ஈராக்கின் கருத்து வெளியிடப்பட்டது.

இதனிடையில் ஈரானின் எண்ணெய்க் கப்பல்களை ஈராக் தாக்கினால் ஈராக்கினதும் அதன் நேச வளைகுடா நாடுகளினதும் கப்பல்களைத் தாக்கப்போதாக ஈரான் அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது. (இ-எ)

### ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபன மாநாடு ஆரம்பம்

அடிஸ் அபாபா, ஜூலை 28

ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தின் மாநாட்டை ஐ. நா. பொதுச் செயலாளர் பெரெஸ் டி குயிலர் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

தென் ஆபிரிக்காவின் நிறவேற்றுமையை எதிர்த்து ஆபிரிக்க நாடுகளும் ஏனைய நாடுகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் பேசுகையில் தெரிவித்தார். (இ-எ)

**வெளி உலகில்**

### "ஸ்டார்க்" யுத்தக் கப்பலின் கப்டன்மீது விசாரணை இல்லை

வாஷிங்டன், ஜூலை 28

வளைகுடாவில் ஈராக் ஏவுகணைத் தாக்குதலுக்காளான அமெரிக்க கடற்படைக் கப்பலான 'ஸ்டார்க்' கின் கப்டனை இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்துவதில்லை.

இப்படி அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இத்தாக்குதலில் 37 அமெரிக்கக் கடற்படையினர் கொல்லப்பட்டனர் என்பது தெரிந்ததே.

இது சம்பந்தமாக விசாரணை நடத்திய அமெரிக்க அரசுக் குழு ஒன்று, தனது வீரர்களைத் தயார் நிலையில் வைக்காதிருந்ததற்காக கப்டனை இராணுவ விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று சிபார்சு செய்திருந்தது. (இ-எ)

# அனல் காற்று: 900 பேர் பலி!

ஏதென்ஸ், ஜூலை 28

தென் ஐரோப்பிய நாடுகளைத் தாக்கிவரும் அனல் காற்றில் இதுவரை 900க்கு அதிகமானோர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

கிரீஸில் மட்டும் 700க்கு மேலானோர் உயிரிழந்தனர்.

துருக்கி, இத்தாலி ஆகிய நாடுகளும் அனல் காற்றினால் பாதிக்கப்பட்டுள்ளன.

சிவில், இராணுவ ஆஸ்பத்திரிகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் வயோதிபர்களே அனல் காற்றினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தனர்.

உஷ்ணம் கூடியதால் இருதயம் வேலை செய்வது நின்று விடுவதால் மரணம் சம்பவிக்கின்றது. (இ-எ)

### தென் கொரியாவில் மீண்டும் சூறாவளி

கோல், ஜூலை 28

இரண்டு வாரங்களுக்கு இடையில் மூன்றாவது முறையாக தென் கொரியாவை சூறாவளி தாக்கியது.

ஐம்பதுக்கு அதிகமானோர் உயிரிழந்தனர்; அறுபதினாயிரம் பேர் வரை வீடிழந்தனர்.

முன்னர் இடம்பெற்ற இரண்டு சூறாவளிகளினால் 500க்கு அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

இலட்சக்கணக்கானோர் வீடிழந்தனர். (இ-எ)

பனாமாவில்

### அரசுக்கு எதிராக கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சிப் பிரமுகர் கைது!

பனாமா, ஜூலை28

பனாமா அரசுக்கு எதிராகக் கருத்துக்களை வெளியிட்ட எதிர்க்கட்சிப் பிரமுகர் ஒருவரை பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர். அவருடைய 40 ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

7 நிமிடங்கள் நடந்த துப்பாக்கிச் சண்டையின் பின்னரே அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பனாமா அரசு அறிவித்தது.

ஆனால் நான்கு மணித்தியாலச் சண்டையின் பின்னர் கைது செய்யப்பட்டனர் என்று சுயேச்சை வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசுக்கு எதிரான அரசியல்வாதிகளைக் கைது செய்து கொல்வதில் ஈடுபட்டுள்ளனர் என்ற குற்றச்சாட்டுக்கு இலக்கான பனாமா இராணுவத் தளபதியை பதவி விலக்கக் கோரியே பனாமாவில் எதிர்ப்பு இயக்கம் நடத்தப்படுகின்றது. (இ-எ)

### மனித உரிமை மீறலுக்குக் கண்டனம்

பிரஸ்ஸல்ஸ், ஜூலை28

தென் ஆபிரிக்காவில் இடம்பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்களை ஐரோப்பிய பொருளாதார சமூகம் கண்டித்துள்ளது.

இது சம்பந்தமான கண்டனக் கடிதத்தை தென் ஆபிரிக்க வெளியுறவு அமைச்சர் பிக் போத்தாவிடம் சமூகத்தின சார்பில் மேற்கு ஜேர்மன் தூதர் கையளித்தார்.

சமூகத்தின் கண்டனம் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று என வெளியுறவு அமைச்சர் போத்தா பின்னர் தெரிவித்தார்.

13 மாதகாலமாக அமுலில் இருக்கும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் தென் ஆபிரிக்க சிறைகளில் 25 ஆயிரம் பேர்வரை தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர். (இ-எ)

### பங்களாதேஷ் அமைச்சரவை மாற்றம்

டாக்கா, ஜூலை 28

பங்களாதேஷ் அமைச்சரவையில் பெரும் மாற்றங்கள் செய்யப்படவிருக்கின்றன.

இவ்வார இறுதிக்குள் இம் மாற்றங்கள் இடம் பெறலாம் என்று பங்களாதேஷ் அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி எர்ஷாட் பதவி விலக வேண்டும் என்று கோரி எதிர்க்கட்சிக் கூட்டணிகள் நடத்திய 54 மணித்தியால வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்தே அமைச்சரவை மாற்றம் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வேலை நிறுத்தத்தின் போது 13 பேர் உயிரிழந்தனர். 300 பேருக்கு மேல் காயம் அடைந்தனர் (இ-எ)

### ஈரானில் அடை மழை 300 பேர் பலி!

தெஹ்ரான், ஜூலை 28

ஈரானில் நான்கு தினங்களாகத் தொடர்ந்து பெய்து வரும் அடை மழை காரணமாக 300 பேர் வரை உயிரிழந்தனர்.

தெற்கு தெஹ்ரானில் மட்டும் நூறு பேர்வரை உயிரிழந்தனர்.

ஆறு ஒன்று கரை உடைத்ததால் ஆயிரத்துக்கதிகமானோர் வெள்ளத்தில் சிக்குண்டனர். (இ-எ)

# ராஜீவ் - ஜே. ஆர் ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள் என்ன?

இன்று கைச்சாத்திடப்படவுள்ள இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் காணப்படும் முக்கிய ஐந்து பிரிவுகளும் உப பிரிவுகளும் இங்கு தரப்படுகின்றன.

இலங்கைப் பிரச்சினை சம்பந்தமாக இன்று இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையே ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

இந்திய அரசின் சார்பில் பிரதமர் ராஜீவ் காந்தியும்—

இலங்கை அரசின் சார்பில் ஜனாதிபதி ஜெயவர்த்தனவும்— உடன்படிக்கையில் கைச்சாத்திடுவர்.

உடன்படிக்கையில் ஐந்து முக்கிய பிரிவுகள் உள்ளன. உபபிரிவுகளும் உள்ளன.

அவை வருமாறு:

1. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒரு நிர்வாக அமைப்பாக இருக்கும்.

அந்த அமைப்பு ஒரு தேர்தல் தொகுதி ஒரு மாகாணசபை, ஒரு ஆளுநர், ஓர் அமைச்சரவை ஆகியவற்றைக் கொண்டதாக அமையும்.

—இரண்டு நிர்வாகப் பிரிவுகள் தேவையா? (வடக்கு மாகாணத்துடன் இணைய விருப்பமா? இல்லையா?) என்பதை கிழக்கு மாகாண மக்கள் தீர்மானிக்க சர்வஜன வாக்கெடுப்பு அடுத்த ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்படவேண்டும்.

—இன வன்செயல்கள், அது தொடர்பான வேறு காரணங்களுக்காக இடம்பெயர்ந்த அனைவரும் சர்வஜன வாக்கெடுப்பில் வாக்களிக்க உரிமையுடையவர்கள்.

—சர்வஜன வாக்கெடுப்பைக் கண்காணிக்க குழு ஒன்றை ஜனாதிபதி நியமிப்பார். குழுவில் பிரதம நீதியரசர், அரசுப் பிரதிநிதி ஒருவர் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதி ஒருவர்– உறுப்பினர்களாக இருப்பர்.

2. நாட்டின் ஒற்றுமை, இறைமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும்.

(அ) சிங்களவர், தமிழர், இஸ்லாமியர்கள், பறங்கியர் வாழும் பல்லின, பலமொழி பேசும் மக்கள் வாழும் நாடு என்பதை ஏற்றுக்கொள்ளுதல்.

(ஆ) நாட்டில் உள்ள இனக்குழுக்களுக்கு தனித்துவமான கலாசார, மொழி உண்டு என்பதை ஏற்றுக் கொள்ளுதல்.

(இ) இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளாக வடக்கு, கிழக்கு மாகாணங்களை அங்கீகரிப்பது; தமிழ்ப் பேசும் மக்கள் தீவில் ஏனைய இனக்குழுக்களுடன் வாழும் உரிமையை அங்கீகரிப்பது.

(ஈ) முன் கூறப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பை சாதாரண பெரும்பான்மையுடன் நிர்ணயிப்பது.

(உ) மாகாண சபைகளுக்கான தேர்தலை இந்த ஆண்டு டிசம்பர் முடிவுக்கு முன்னர் நடத்துவது.

(ஊ) இராணுவத்தை முகாம்களுக்குள் வைத்திருப்பதை உறுதி செய்வது.

(எ) இரண்டு மாகாணங்களிலும் யுத்த நிறுத்தத்தை உறுதி செய்வது.

(ஏ) எல்லா அரசியல் கைதிகளுக்கும் பொது மன்னிப்பளிப்பது.

3. மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் குறித்து ஆறு வாரங்களினுள் டிசம்பர் 19 யோசனை அடிப்படையில் பேச்சுக்கள் நடத்தி தீர்வு காணுதல். உடன்பாடு கைச்சாத்திடப்பட்டதில் இருந்து வரும் ஆறு வாரங்களில் இது தீர்மானிக்கப்பட வேண்டும்.

4. (அ) தமிழ் நாட்டில் இருந்து இயங்கும் போராளிக் குழுக்களின் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்குமுகமாக பாக்குநீரிணையில் கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும் என்று இந்திய தரப்பில் உறுதி கூறப்பட வேண்டும்

(ஆ) தமிழ் நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதும் சிறிமா— சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் வரும் மலையகத்தில் உள்ள இந்திய பிரஜைகளை இந்தியாவுக்கு எடுப்பதும் ஒரே நேரத்தில் நடைபெறும் என்பதை உறுதிப்படுத்துவது.

5. தீவின் உத்தியோக மொழிகளாக சிங்களம், தமிழ், ஆங்கிலம் இருக்கும்.

சுயாட்சித் தமிழ் மாகாணத்தின் மாகாண சபையில் 52 உறுப்பினர்கள் இருப்பர்.

வடக்கு மாகாணத்தில் இருந்து 27 பேரும் கிழக்கு மாகாணத்தில் இருந்து 25 பேரும் இச்சபையில் உறுப்பினர்களாக இருப்பர். (இ-எ)



**பொய்யாமொழி**

குறள்:

அறந்தாற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்

சிறந்தானென்று ஏவற்பாற் றன்று.

பொருள்:

(செய்யும் வழிகளை) அறிந்து இடையூறு [illegible] அல்லாமல், மற்றவனைச் சிறந்தவன் என்று கருதி ஒரு செயலைச் செய்யுமாறு ஏவக் கூடாது.

### பிரதேச சபைத் தேர்தல்களை ஏன் பின்போட முடியாது?

**பிரஜைகள் குழுத் தலைவர் கேள்வி**

கல்முனை, ஜூலை 29

வடக்கு - கிழக்கின் நாடாளுமன்ற இடைத் தேர்தல்களை பின்போட முடியுமென்றால், ஏன் பிரதேச சபைத் தேர்தல்களையும் பின்போட முடியாது?

இவ்வாறு கேட்டு அறிக்கை ஒன்றை, அக்கரைப்பற்று பிரஜைகள் குழுத் தலைவர் ஜனாப். ஏ எம் அகமது லெவ்வை வெளியிட்டுள்ளார்.

இன்று எந்த நிமிடமும் எதுவும் நிகழலாம் என்ற நிலையில் மக்கள் உயிரை கையில் பிடித்துக்கொண்டு தவிக்கின்றார்கள்.

இந் நிலையில் தான் இன்று மக்கள் தேர்தலை விரும்பவில்லை.

ஆகவே ஆட்சியாளர் வடக்கு, கிழக்கு இடைத் தேர்தல்களை பின்போட்டிருக்கின்றனர். இது வரவேற்கத்தக்க விடயம்.

இன்னும் காலம் செல்லவில்லை வடக்கு, கிழக்கு மக்களின் பிரதேச சபைத் தேர்தல்களையும் பின்போட ஆட்சியாளர் முன்வரவேண்டும்.

இப்படி அறிக்கையில் கோரப்பட்டுள்ளது. (இ-84)

### நிவாரண விநியோகம்

புத்தூர்ப் பகுதியில் உள்ள 400 குடும்பங்களுக்கு திங்கள் இந்தியநிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன.

### கொழும்பு பலகலைக் கழகம் மூடப்பட்டது

கொழும்பு பல்கலைக் கழகம் திங்களன்று திடீரென மூடப்பட்டது.

காரணம் தெரிவிக்கப்படவில்லை.

எப்போது மீண்டும் திறக்கப்படும் என்பது அறிவிக்கப்படவில்லை.

### சமூக முன்னேற்ற கழகங்களின் சமாசம் உதவி

குருநகர், ஜூலை 29

வடமராட்சிப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து நல்லூர், எழுதுமட்டுவாள், கோண்டாவில், நாச்சிமார் கோவிலடி பகுதிகளில் தங்கியுள்ள அகதிகளுக்கு சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தால் ஒரு நாள் மதிய உணவு வழங்கப்பட்டது. உணவுப் பொருள்கள், உடுபுடைவை, பணம் முதலியனவும் வழங்கப்பட்டன.

சமாசத் தலைவர் திரு. இ.மு.நாகலிங்கம், செயலாளர்: திரு. சின்னையா, பொருளாளர்: திரு. வீ. நவரத்தினம், சமாதான நீதிபதி திரு. சு. சுந்தரம் ஆகியோர் நேரில்சென்று நிவாரண உதவிகளை வழங்கினர். (இ-51)

**சமய சந்நிதிகளில்**

### திருவிளக்குப் பூசை

யாழ்ப்பாணம், ஜூலை29

இன்று புதன்கிழமை மாலை 5 மணியளவில் ஆனைக்கோட்டை ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் ஆலயத்தில் 25ஆவது திருவிளக்குப்பூசை நடைபெறும். (இ-எ)

### குருநகர் வழமைக்குத் திரும்புகின்றது

குருநகர், ஜூலை 29

குருநகரில் இருந்து கடந்த மே மாதம் பிற்பகுதியில் வெளியேறிய பொதுமக்கள் பலர் இப்பொழுது ஏற்பட்டுள்ள அமைதியான சூழ்நிலையை அடுத்து தத்தமது இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

வெறிச்சோடி இருந்த [illegible]ளில் தற்போது சனநடமாட்டத்தைக் காண முடிகிறது.

தாக்குதலின்போது பழுதடைந்த குடிதண்ணீர் விநியோகக் குழாய்கள் திருத்தப்படாததால் குடிதண்ணீர்வரும் ஒரு சில குழாய்களைச் சுற்றிப் பெருமளவில் பொதுமக்கள் காண[illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

★ வர்ண நிழற்பட பிரதி ஒன்று 5/-மட்டுமே
★ நெகடிவ் (Processing) செய்தல் இலவசம்
★ விற்பனை - வர்ண நிழற்பட சுருள்கள்
KODAK - FUJI - KONICA
TUDOR - FORTB
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்,
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

29-07-1987 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்பட பிரதிகள்
★ சம்பியூட்டர் முறையில்
★ குறைந்த செலவில்
★ சிறந்த சேவையில்
பெற்றுக் கொள்ளலாம்.

## வெறும் கடதாசி ஒப்பந்தம் என்கிறார் புலிகள் தலைவர் பிரபா

புதுடில்லி, ஜூலை 29

இலங்கை — இந்தியா கைச்சாத்திடும் ஒப்பந்தம் வெறும் கடதாசி ஒப்பந்தமே.

தமிழர் அபிலாஷைகள் இந்த ஒப்பந்தத்தில் இடம்பெறவில்லை.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரன் தெரிவித்தார் என்று ஆஸ்திரேலிய வானொலி நேற்றுக் காலை அறிவித்தது.

சமரச உடன்பாடு தமிழரின் முதுகில் குத்துவதாக அமைந்துள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து இலங்கை இராணுவம் வாபஸ் வாங்கப்படும் வரை நாம் ஆயுதங்களை ஒப்படைக்க மாட்டோம் என்று புலிகள் தலைவர் பிரபாகரன் தெரிவித்ததாக ஆஸ்திரேலிய வானொலி மேலும் அறிவித்தது. (இ-எ)

## நுளம்பு வலைகளும் வந்தன

யாழ்ப்பாணம், ஜூலை 29

நேற்று கொண்டுவரப்பட்ட அம்புலன்ஸ்களுடன் முப்பது நுளம்பு வலைகளும் வந்து சேர்ந்தன.

இவற்றில் பதினைந்து நுளம்பு வலைகள் யாழ் போதனா வைத்திய சாலைக்கும் மிகுதி பதினைந்து நுளம்பு வலைகளும் மந்திகை ஆஸ்பத்திரிக்கும் வழங்கப்படும். (உ-ஒ-10)

## குடாநாட்டிற்கு----

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வந்திருந்தார்.

நேற்று மாலையே யாழ் வைத்திய சாலைக்கான அம்புலன்ஸ் திரு. குலசேகரத்தினால் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியனிடம் கையளிக்கப்பட்டது.

ஸ்ரீ லங்கா செஞ்சிலுவைச் சங்கத்தால் வழங்கப்பட்ட அம்புலன்ஸ் யாழ்ப்பாண செஞ்சிலுவைச் சங்கத்தினரின் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

பின்னர்பருத்தித்துறை வைத்தியசாலைக்கு இது வழங்கப்படும். (உ-ஒ-10)

## தீர்வு குறித்து அமெரிக்கா

வாஷிங்டன், ஜூலை 28

இனப்பிரச்சினைத் தீர்வில் உற்சாகமான முன்னேற்றம் காணப்படுகின்றது.

சம்பந்தப்பட்டவர்கள் இம்முயற்சியில் பின்னடைந்தவிடக்கூடாது-

இப்படி அமெரிக்கா கருத்து வெளியிட்டுள்ளது.

அமெரிக்க ராஜாங்க அமைச்சுப் பேச்சாளர் சார்ள்ஸ் றெட்மன் கருத்து வெளியிடுகையில், ''சமாதான உடன்பாடு கண்ட இலங்கை, இந்திய அரசுகளின் துணிச்சலைப் பாராட்டுகின்றேன்''— என்று தெரிவித்தார்.

# பூநகரி முகாம் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 29

பூநகரி கோட்டை (வாடியடி) இராணுவ முகாம்மீது திங்கள்மாலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலால்முகாம் தகர்க்கப்பட்டது.

இத்தாக்குதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஆயுதங்களும் மீட்கப்பட்டன.

விடுதலைப்புலிகள் தரப்பில் ஏழு போராளிகள் வீரமரணமடைந்தனர்.

சங்குப்பிட்டியில் இருந்து நான்குமைல் தூரத்துக்கு அப்பால் உள்ளது இந்த இராணுவ முகாம்.

இத்தாக்குதல்களையடுத்து பல இராணுவத்தினர் முகாமைவிட்டு காட்டுப்பகுதிக்குள் தப்பி ஓடியதாகத் தெரிவிக்கப்படுகிறது

இராணுவ முகாம் மீதான தாக்குதலையடுத்து ஹெலிக்கொப்டர்கள் இப்பகுதிக்கு விரைந்துசென்று பதில் தாக்குதல் நடத்தின.

இத்தாக்குதல்களினால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை. (உ-10)

# விடுதலைப் புலிகள் ஏழு பேர் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

திங்கள்மாலை பூநகரி, கோட்டை முகாம் தாக்குதலின்போது தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் ஏழுபேர் மரணம் அடைந்தனர்.

மேஜர் அசோக் (டேவிட்-உயிலங்குளம்), லெப்டினன்ட் சகர்(சிறிதரன் - ஆட்காட்டி வெளி), லெப்டினன்ட் துரைமணி (மில்ரன்- இசைமாலைத் தாழ்வு), லெப்டினட் அலிபா (ஜோசப் - நறுவிலிக்குளம்) -

இரண்டாவது லெப்டினன்ட் தம்பா (இளவாலை), இரண்டாவது லெப்டினன்ட் ரகு(அடம்பன்), செந்தூரன் (உயிலங்குளம்) ஆகியோரே அவ் எழுவரும்.

இவர்களுக்குவீரவணக்கம் தெரிவித்து புலிகள் அறிக்கை விடுத்துள்ளனர் (உ-ஒ)

## எதிர்க்கட்சியினருக்கு- - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சொன்னார்.

பின்னர் எதிர்க்கட்சிகளின் தலைவர்களை அழைத்து சுமார் ஒரு மணி நேரம பிரதமர் ராஜீவ் பேசினார்.

பிரதமர் இச்சந்திப்புக்களின்போது தெரிவித்ததாவது;

இலங்கை— இந்திய உடன்பாடு அமுலுக்கு வந்த 24 மணித்தியாலத்தில் யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கப்படும.

வன்செயல்களும் உடன் முடிவுக்கு வந்து விடும்.

வடக்கு-கிழக்கு இணைக்கப்படும்.

உடன்பாட்டை அமுல் நடத்துவதை உறுதிசெய்வதில் அமைதிகாக்கும் படை ஒன்று ஈடுபடும்.

இந்திய அவதானிகள் குழுவின் உதவியும் வழங்கப்படலாம்.

இலங்கைத்தமிழ் அகதிகள் இலங்கை திரும்புவதும்; மலையகத்தில் உள்ள இந்தியப் பிரசைகள் இந்தியா திரும்புவதும் ஒரே சமயத்தில் நடைபெறும்.

உடன்பாட்டை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஏற்காதது எனக்கு உண்மையிலேயே ஏமாற்றத்தைத் தருகின்றது.

இந்தஉடன்பாடு பற்றி புலிகள் தரப்பினர் சம்மதம் தெரிவித்திருந்தாலும் ஆயுதங்களை ஒப்படைக்கும் விஷயம் குறித்து அவர்கள் ஆட்சேபம் தெரிவித்தனர்.

ஆயுதங்களை ஒப்படைத்த பின்னர் தங்கள் உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் கோரினர்.

பாதுகாப்புத் தரப்படும் என்று அரசாங்கம் அவர்களுக்கு உறுதி கூறி இருக்கின்றது.

சமரச உடன்பாட்டை ஏனைய அமைப்புக்கள் வரவேற்றுள்ளன.

—இப்படி பிரதமர் காந்தி சொன்னார்.

பிரதமரின் முயற்சிக்கு எதிர்க்கட்சித்தலைவர்கள் பூரண ஆதரவைத் தெரிவித்தனர். (இ எ)

## தங்களை யாழ் - - -

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

திருப்பி அனுப்பி வைக்கும் வேண்டுகோளை விடுத்தது.

பி.பி சி. செய்தியாளர் கூல்றிஜ் மேலும் அறிவித்திருப்பதாவது;

சமாதான உடன்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு வந்த பின்னர் புதுடில்லியில் நாம் தொடர்ந்து நிற்பதில் பிரயோசனம் இல்லை என்று புலிகள் பிரமுகர் தெரிவித்தார்.

சமாதான உடன்பாடு என்ற பேச்சினால் குழப்பமடைந்த யாழ்ப்பாணம் மக்களுக்கு நிலைமையை விளக்க வேண்டியுள்ளது என்றும் அவர் கூறினார்.

எம்மை மீண்டும் யாழ்ப்பாணம் கொண்டு போய் விடுவதாகக் கூறியே அழைத்து வந்தனர் என்றும் அப் பேச்சாளர் சொன்னார்.

ஆனால் இந்திய அரசுப் பேச்சாளரோ, ''புலிகள் உடன்பாட்டை ஏற்காவிட்டாலும் தொடர்ந்து அவர்களுடன் பேச்சு நடத்துவோம்'' என்று தெரிவித்தார்.

இப்படி பி. பி. சி. வானொலி தனது புதுடில்லிச் செய்தியாளர் கூல்றிஜ்ஜின் அறிக்கையை ஆதாரங்காட்டித் தெரிவித்தது (இ-எ)

பூநகரித் தாக்குதலை அடுத்து

## கால் நடையாக பலர் யாழ் வந்து சேர்ந்தனர்

குருநகர், ஜூலை 29

பூநகரி—வாடியடி முகாம் தாக்குதலை அடுத்து இரு ஹெலிக்கொப்டர்களில் இருந்து தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டன. இதனால்பீதியடைந்த பூநகரி - நல்லூர், சித்தங்குறிச்சி, பாலாவி, பள்ளிக்குடா, ஞானிமடம் போன்ற அயற்கிராம மக்கள் இரவிரவாக காடுகளுக்குள்ளால் நடந்து பத்து பதினைந்து மைல்களைத் தாண்டி கல்முனைக் கடற்கரையால் யாழ் நோக்கி வந்து சேர்ந்தனர்.

கடல் தொழில் செய்வதற்காக அப்பகுதிகளில் தங்கியிருந்த மீனவர்களும் நேற்றுக்காலை குருநகர், பாஷையூர், கொழும்புத்துறைப் பகுதிகளை வந்துசேர்ந்தனர்.

அவர்களுடன் பூநகரி கிராமவாசிகளும் பெருமளவில் தோணிகளில் இடம்பெயர்ந்து மேற்படி இடங்களில் வந்து தங்கியுள்ளனர்.

பூநகரி கிராமவாசிகள் காடுகளுக்குள் மறைவிடந்தேடி பதுங்கி இருந்து விட்டு நேற்று அதிகாலை கிட்டிய பாதுகாப்பான இடங்களை நோக்கி நூற்றுக்கணக்கில் சென்று கொண்டிருந்தனர். (இ-51)

## சுதுமலையில் ஆடிப்பூர விழா

யாழ்ப்பாணம், ஜூலை29

சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரிஅம்பாள் ஆலயத்தில் ஆடிப்பூர விழாவும் பிள்ளைத்தமிழ் நூல் வெளியீட்டு விழாவும் இன்று புதன் நடை பெறும்.

யாழ் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் நூல் வெளியீட்டுரையை நிகழ்த்துவார்.

யாழ் பல்கலைக் கழக அரசறிவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ் கே. சண்முகநாதன் தலைமை வகிப்பார்.

நூலாசிரியர் பண்டிதர் திரு. மு. சந்தையா பதிலுரை நிகழ்த்துவார். (இ-எ)

# அரசின் யோசனை----

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கிறது.

இந்திய அரசானது தனக்கு நேர்ந்துள்ள அமெரிக்க அச்சுறுத்தலை எதிர் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் நிற்கிறது- இவை இரண்டிற்குமூடாக தமிழ் பேசும் மக்களின் அடிப்படை எண்ண அபிலாஷைகளை நிறைவேற்றி விடுதலை பெற விடுதலை அமைப்புகள் விடாப்பிடியாகப் போரிடுகின்றன.

இம் மும் முனைகளிலிருந்தே இலங்கை - இந்தியா - இயக்கங்கள் ஆகியவற்றுக்கிடையே பரஸ்பரம் ஏற்பட்டு வரும் பேச்சுக்களை நோக்க வேண்டியுள்ளது.

இலங்கை - இந்திய நாடுகளிடையே தயார் நிலையிலுள்ள ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் பட்சத்தில், இலங்கைக்குள் இந்திய இராணுவம் இலங்கை அரசின் அழைப்பின் பேரில் எந்நேரமும் வந்திறங்கலாம் -மேலும் இலங்கைக் கடல் பரப்பில் கூட்டு ரோந்து செய்வதற்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது இலங்கை இனிமேல் எந்த நாட்டோடும் (இந்தியா தவிர்ந்த) பாதுகாப்பு ஒப்பந்தம் செய்ய முடியாது. அத்தோடு இந்திய அரசு இந்து சமுத்திரத்திலுள்ள அனைத்துப் பகுதிகளையும் கண்காணிக்கும் உரிமை பெறுகிறது.

எனவேமேற்படி ஒப்பந்தத்தின் மூலம் இந்திய நலன் நிறைவேற்றப்படுகிறது-

ஒப்பந்த யோசனைகள் வெளித் தோற்றத்திற்கு முன்னேற்றகரமானதாகத் தோன்றினாலும் இவ்வுடன்படிக்கைகளை நிறைவேற்றுவதற்காக இலங்கை-இந்திய அரசுகள் விடுதலை அமைப்புகள் மீது விதித்துள்ள நிபந்தனைகள் மிகவும் ஆபத்தானவை.

இராணுவ முகாம்கள் அப்படியே இருக்க இயக்கங்கள் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு நிராயுதபாணியானதும் கிழக்கில் மட்டும் நடத்தப்படும் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றின் முடிவுக்கிணங்க வடக்கு கிழக்கு இணைப்பு நிரந்தரமாக்கப்படும் என்பதே எம்மீது விதிக்கப்பட்டுள்ள நிர்ப்பந்தங்களாகும்.

இராணுவ முகாம்கள் அகற்றப்படாத நிலையில் ஆயுதங்களைப் பறிக்க முயல்வதும், வடக்கு-கிழக்கு இணைப்பிற்கு கிழக்கில் மட்டும் சர்வசன வாக்கெடுப்பு நிகழ்த்தப் போவதாகக் கூறுவதும் இலங்கை இனப் பிரச்சினையை சமாதானமாகத் தீர்ப்பதற்காக வல்ல தீர்வு பற்றி ஏட்டில் சொல்வதை நடைமுறையில் இல்லாதொழிக்கவே.

இடைக்காலத் தீர்வு எதையும் இலங்கை அரசு ஏற்படுத்த உளப்பூர்வமாக விரும்பினால் முதலில்—

1. வடக்கு, கிழக்கு, மலையகத்தில் உள்ள இராணுவ முகாம்களையும், சிங்களக் குடியேற்றத்தையும் அகற்ற வேண்டும்.

2. வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளிட்ட பிரதேசங்களை மொழிவாரி தமிழ்ப் பிரதேசமாக அங்கீகரிக்க வேண்டும்.

3. அவசரகாலச் சட்டம், பயங்கரவாதச் சட்டம் என்பன நீக்கப்படுவதுடன், அரசியல் கைதிகள் நிபந்தனையின்றி விடுக்கப்படல் வேண்டும்.

இவை நிறைவேற்றப்படும் பட்சத்திலேயே இடைக்காலத் தீர்வு பற்றிப் பேச முடியும்.எமது நிலைப்பாட்டை மீறி இந்தியா எம்மீது நிர்ப்பந்தம் புரிந்தாலும் போராட்டம் ஓயாது என்பது நிச்சயம். —இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ)

## குடா நாட்டில் - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

யைத் தெரிவிக்காவிடில், இந்தியா தனது போக்கை மாற்றிக் கொள்ளாது.

தமிழ் மக்களின் நிலையை எடுத்துக்காட்டவே ஹர்த்தால், பேரணிகளை ஏற்பாடு செய்துள்ளோம். இவை இந்தியாவுக்கு எதிரானவை அல்ல என்று பொதுநல இயக்கப் பிரமுகர் ஒருவர் விளக்கம் தெரிவித்தார்.

இவ்வேளையில் மக்கள் தமது நிலைப்பாட்டை, அதாவது ஸ்ரீ லங்கா அரசோ அல்லது இந்திய அரசோ திணிக்கும் தீர்வு எதையும் ஏற்கமாட்டார்கள் என்பதை எடுத்துக்காட்டத் தவறினால், தமிழ் மக்களின் சரியான உணர்வுகளை இந்தியா புரிந்துகொள்ளாமல். பாதகமான பின் விளைவுகளுக்கு வழிகோலிவிடும் ஆபத்து உண்டு எனவும் அவர் தெரிவித்தார்.

இன்று நகரில், வர்த்தக ஸ்தாபனங்கள் யாவும் மூடப்பட்டிருக்கும். தனியார் வாகன சேவையும் நிறுத்தப்படும்.

வடபிராந்திய மினி பஸ் சேவைச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தனியார் வாகனங்கள் எதுவும் இன்று சேவையில் ஈடுபடமாட்டா என அறிவித்துள்ளது.

ஹர்த்தாலுக்கு புறம்பாக நகரின் பிரதான வீதிகள் வழியாக ஆர்ப்பாட்டப் பேரணிகளும் நடைபெறும்.

இதுபோல குடா நாட்டின் சகல பகுதிகளிலும் ஊர்வலங்களுக்கு பொது நல ஸ்தாபனங்கள் ஏற்பாடுகள் செய்துள்ளன. (அ 10)

## ஈழத் தமிழ -

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவே முழுப் பொறுப்பு என்பதை உலகுக்கு வெளிப்படுத்துகிறோம்.

இந்த யோசனைகளுக்கு ஆதரவு தெரிவித்துக் கையெழுத்திட்ட கூட்டணி மற்றும் அனைத்து இயக்கங்களும் தமிழ் மக்களின் துரோகிகள் என்பதையும் தெரியப்படுத்துகிறோம்.

— இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## விவரம் நாளைய உதயனில்

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு உதயன் உங்களுக்கு உவந்தளிக்க இருக்கும் ''அதிஷ்டப் பயணம்'' பற்றிய விவரம் நாளைய உதயனில் வெளிவரும்.

— ஆசிரியர்

## தனித்து நின்று எதிர்க்கவும் பிரதமர் தயார்

கொழும்பு, ஜூலை 29

புதிய ஒப்பந்தத்தை தனித்து நின்று எதிர்க்கவும்தயங்கமாட்டேன்.

இப்படி பிரதமர் பிரேமதாச கடந்த திங்கள் நடந்த விசேஷ அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

பின்னர் இந்தியத் தூதுவர் டிக்ஸிற அமைச்சர்களுக்கு விளக்கமளித்தார்.

பிரதமர், விவசாய அமைச்சர் ஆகியோருடன் கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்காவும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளாமல பகிஷ்கரித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்துக்கு பிரதமர் வழமைபோன்று உத்தியோக காரில் வராமல் பிரத்தியேக வாகனம் ஒன்றிலேயே வந்தார். (இ-எ)

## தமிழர்----

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்கள் வாழும் பகுதிகளை இலக்காக வைத்து நடத்தப்பட்டதால்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 2000 இராணுவ, பொலிஸ் படையினர் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கலகக்காரர் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 150க்கு அதிகம் என்றும், இந்தியன் வங்கிக் கிளை சேதமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## ராஜீவுடன் வரும் அமைச்சர்கள்

புதுடில்லி, ஜூலை 29

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் அவரது மனைவி திருமதி சோனியா காந்தியும் இன்று கொழும்பு வருகின்றார்.

அவர்களுடன் மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறைஅமைச்சர் பி. வி. நரசிம்மராவ்.நிதியமைச்சர் என். டி. திவாரி, இணையமைச்சர்கள் நட்வர்சிங், சிதம்பரம் ஆகியோரும் -

இந்திரா காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜி கே. மூப்பனார், வெளியுறவுச் செயலாளர் ஜி. பி. எஸ். மேனன் ஆகியோரும் கூட வருகிறார்கள். (உ)

## புலிகள் - - -

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

விற்கான புதிய யோசனைகளை புலிகள் மீளாய்வு செய்து வருவதாக அச்செய்தி மேலும் தெரிவித்தது. (உ)

## கொழும்பு----

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பெற்றன.

பொலீஸார் போட்ட தடைகளைத் தூக்கி எறிந்து விட்டு கலகக்காரர்கள் மூர்க்கமாக வன்செயலில் ஈடுபட்டனர்.

ஆரம்பத்தில் கண்ணீர்க்குண்டுப் பிரயோகம் செய்த பொலீஸார், பின்னர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

கண்ணீர்க் குண்டுப் பிரயோகம் நடத்தப்பட்ட சமயம் தானும் சிக்கிக் கொண்டதாகவும் —

பின்னர் ஓர் இடத்தில் கடைகளைக் கொள்ளை அடித்துச் சென்றவர்கள் டேப்ரிகார்டர்களை எடுத்துச் சென்றதைத் தான் கண்டதாகவும் பி.பி சி. செய்தியாளர் தெரிவித்தார்.

1983 ஜூலை கலவரத்தின் பின்னர் கொழும்பில் இடம் பெற்ற மோசமான கலவரம் இது என்று பாதுகாப்பு வட்டாரங்கள்வர்ணித்ததாகவும் பி. பி. சி. செய்தியாளர் தெரிவித்தார். (உ எ)

## நீத்தார் பட்டியல்

### திருமதி நாகலிங்கம் பொன்னம்மா



இவர் காலஞ்சென்ற திரு. வ. நாகலிங்கம், (இலங்கை புகையிரத திணைக்களப் பரிசோதகர்) அவர்களின் அன்பு மனைவியும், பட்டயக் கணக்காளர் நா. தயானந்தன், (முன்னாள் கணக்காளர் K.G. நிறுவனம்), திருமதி வ. தயாநிதி, திருமதி ஆ. தயாநிதி (பரிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் க. வரதராசா, (துறைமுக அதிகார சபை கொழும்பு), ஆனந்தநாதன் (பரிஸ்), திருமதி த. தனபூபதி ஆகியோரின் அருமை மாமியாரும், சுசித்திரா, சுகந்தன், வனித்ரா, பிரதீபன் ஆகியோரின் அருமை பேத்தியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன் கிழமை காலை 10 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

இப்படிக்கு
நா. தயானந்தன்

DIPLOMA COURSES IN
NURSING AND PHARMACY
தாதிப்பயிற்சி நெறியில் — டிப்புளோமா — 7 ஆம் பிரிவு
பாமஸி பயிற்சி நெறியில் — டிப்புளோமா — 3 ஆம் பிரிவு
● அரசாங்கப் பாடத் திட்டம்
● வெளிநாட்டு உள்நாட்டு வேலைவாய்ப்பும், உயர்கல்வியும்
● பாடத்திட்டத்திற்கேற்ப இலவச ஆங்கில வகுப்புக்கள்
ஆரம்பம் 1st. AUG. 1987
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, st. PETERS LANE,
JAFFNA.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ... நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 29-07-1987
Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. at 292/2 Navalar Road, Jaffna on Wednesday July 29, 1987.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org